# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## தாய்லாந்து, கென்யா, DR காங்கோவில் நடைபெற்ற போதகர்கள் கருத்தரங்கு, கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்களில் பரிசுத்த ஆவியானவரின் அக்கினிமயமான கிரியைகள் வெளிப்பட்டன.




உயர்திரு. ஹீசன் லீ, மான்மின் உலக வழிநடத்தும் போதகர் தாய்லாந்து, கென்யா மற்றும் DR காங்கோவில் போதகர்கள் கருத்தரங்கையும், சுகமளிக்கும் கூட்டத்தையும் நடத்தும் ஊழிய பயணத்தை 2017 நவம்பர் 6 முதல் 22வரை மேற்கொண்டார்கள் (வல்லமை கலைநிகழ்ச்சி குழுவினர்கள், படம் 5).

இந்த ஊழியத்தில் போதகர்களுக்கான முதல் கூட்டமான இந்தோசீனா போதகர்கள் கருத்தரங்கு நவம்பர் 7 அன்று, தாய்லாந்தின் மெசாயிலுள்ள மெக்கங் டெல்டா ஹோட்டலில் நடைபெற்றது. அந்த கருத்தரங்கில் மியான்மர், லாவோஸ், வியாட்நாம், கம்போடியா, மலேசியா மற்றும் உள்ளூரிலிருந்து வந்திருந்த போதகர்களும் சபை தலைவர்களும் கலந்துகொண்டனர் (படம் 4). உயர்திரு. லீ அவர்கள், ரோமர் 8:12–16 வசனங்களின் அடிப்படையில் “பரிசுத்த ஆவியானவரின் சத்தம், உந்துதல் மற்றும் வழிநடத்துதல்” என்ற தலைப்பின்கீழ் செய்தியை பிரசங்கித்தார். செய்திக்குப் பிறகு, பங்குப்பெற்றவர்கள் செய்தியினால் தங்களை ஒப்பிட்டுப் பார்த்து, முழங்காலில் நின்று கண்ணீரோடு மனந்திரும்பினார்கள். ஆவியின் நிறைவோடு அவர்கள் துதித்தபோது, அவர்கள்மேல் ஆவியானவரின் அக்கினி இறங்கியது; அநேக சுகத்தின் கிரியைகளை அருளியது.

8ம் தேதி, உயர்திரு. லீ சியாங்ராய் மான்மின் சபையில் (போதகர் ஜேவொன் லீ) கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தினார்கள். அவர்களுடைய கைக்குட்டை ஜெபத்தின் மூலமாக அநேக மக்கள் மனஇறுக்கம், சர்க்கரைவியாதி, ஆஸ்துமா, மோசமான பார்வைத்திறன் மற்றும் காதுகேளான்மை போன்ற பல வியாதிகளிலிருந்து சுகமடைந்தனர் (படம் 9 மற்றும் 10).

12ம் தேதி, உயர்திரு. லீ அவர்கள் நைரோபி மான்மின் பரிசுத்த சபையின் (பிஷப் அறிவர். மியாங்ஒ ச்சங்) 17வது ஆண்டுவிழா ஆராதனை மற்றும் கைக்குட்டை சுகமளிக்கும் ஆராதனையை நடத்தும்படியாக கென்யாவிற்குச் சென்றார்கள். ஆண்டுவிழா ஆராதனையில் போதகர் ஹீசன் லீ 1 கொரிந்தியர் 12:27ன் அடிப்படையில் “பூரண ஆவியின் ஓட்டம்” என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்தார். ஏறக்குறைய 3,300 பேர் பங்குப் பெற்றனர். தென்சூடான், உகாண்டா, டன்சானியா போன்ற இடங்களிலிருந்து வந்திருந்த 6 பிஷப்கள் மற்றும் கென்யாவின் 18 பகுதிகளில் உள்ள கிளைசபைகளின் போதகர்களும் பங்குப்பெற்றனர். கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தில், இரைப்பைக் கட்டி, முடக்குவாதம், மோசமான பார்வைத்திறன் மற்றும் காது பிரச்சனை போன்ற பல்வேறு வியாதிகளிலிருந்து அதிக எண்ணிக்கையில் மக்கள் சுகமடைந்தனர் (படம் 7 மற்றும் 8).

13ம் தேதி, “பரிசுத்த ஆவியானவரின் சத்தம், உந்துதல் மற்றும் வழிநடத்துதல்” என்ற தலைப்பின் கீழ் கென்யா போதகர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. பங்குப்பெற்றவர்கள் மிகுந்த ஆசீர்வாதமடைந்தனர்; பரிசுத்த சுவிசேஷத்தின் மீது தாங்கள் கொண்டுள்ள மிகுதியான வாஞ்சையை வெளிப்படுத்தினார்கள்.

16ம் தேதி, உயர்திரு. லீ அவர்கள் DR காங்கோவிற்குச் சென்று, கின்ஷாசா போதகர்கள் கருத்தரங்கை நடத்தினார்கள். அதில் அநேக பிஷப்களும், நன்கு பிரசித்தமான உள்ளூர் போதகர்களும் பங்குப்பெற்றனர். அந்த இடத்திலும் மீண்டுமாக “பரிசுத்த ஆவியானவரின் சத்தம், உந்துதல் மற்றும் வழிநடத்துதல்” என்ற பிரசங்கத்தை கொடுத்தார். பிஷப்களும், போதகர்களும் மிகுந்த கிருபையை பெற்று, தாங்கள் ஒற்றுமையாக இல்லாமல்போனதற்காக மனந்திரும்பினார்கள். ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு வலுமையான உறவை ஏற்படுத்திகொண்டனர்.

17ம் தேதி, போதகர் அவர்கள் ஜீவனுள்ள தேவனின் சபையில் (பிஷப் ஜாக்யஸ் நீமா ஷிகா டெண்டா) கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தினார்கள். “சுகமளிக்கும் தேவன்” (யாத்.15:26) என்ற தலைப்பில் செய்தியை கொடுத்த பிறகு வல்லமை நிறைந்த கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள். ஜெபத்தின்மூலமாக, ஒரு மனிதன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டான். குடலிறக்கங்கள், நாசியழற்சி, பக்கவாத பின்விளைவுகள் மற்றும் நடப்பதில் இருந்த சிரமங்கள் போன்ற பல்வேறு வகையிலான வியாதிகளிலிருந்து மக்கள் விடுதலை பெற்றனர்.

18ம் தேதி, கின்ஷாசா மான்மின் சபை (போதகர் ஜேக்கப் லீ) அதன் 10வது ஆண்டுவிழா ஆராதனை, பிரதிர்ஷ்டை நிகழ்ச்சி, கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்களை நடத்தியது. உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் சங்கீதம் 126:5–6ன் அடிப்படையில் “மேய்ப்பரின் கனி” என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்தார் (படம் 6). அவர்கள் கைக்குட்டையை வைத்து ஜெபித்தபோது, எய்ட்ஸினால் வேதனைப்பட்டு வந்த ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியை பெற்றுக் கொண்டார், எய்ட்ஸ் வியாதியிலிருந்து சுகமடைந்தார். மேலும், திரள் எண்ணிக்கையிலான மக்கள் பல்வேறு வியாதிகளிலிருந்து சுகமடைந்தனர், நல்ல பார்வைத்திறனையும், கேட்கும் திறனையும் புதுப்பித்துக் கொண்டனர். அவர்கள் தங்களது சாட்சிகளின் மூலமாக கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தினார்கள் (படம் 11 மற்றும் 12).

அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமை 19ம் தேதி அன்று, மற்றொரு கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டமானது காங்கோ நாட்டிலுள்ள மிகப் பெரிதான சபைகளில் ஒன்றான ஆவிக்குரிய யுத்த கிறிஸ்தவ ஊழியங்களில் (ரெவ. எலிசபெத் ஒலங்கி வொஷோ) நடைபெற்றது. உயர்திரு. லீ அவர்கள் “சுகமளிக்கும் தேவன்” (யாத்திராகமம் 15:26) என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்தார்; கைக்குட்டையை வைத்து ஜெபித்தார். ஜெபத்தின் மூலமாக, ஒரு பெண் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றாள். மேலும், பல அதிக எண்ணிக்கையிலான மக்கள் எய்ட்ஸ், மலேரியா, குடல்வாலழற்சி போன்ற அநேக வியாதிகளிலிருந்தும், பலவிதமான வலிகளிலிருந்தும் சுகமடைந்தனர் (படம் 1 முதல் 3 மற்றும் 13).

ரெவ. எலிசபெத் ஒலங்கி வொஷோ விலையேறப் பெற்ற செய்திக்காகவும், தங்கள் விசுவாசிகளை பரிசுத்த ஆவியானவரின் நிறைவால் நிரப்பிய வல்லமையான கிரியைகளுக்காகவும் தன்னுடைய நன்றியின் இருதயத்தை வெளிப்படுத்தினார்கள். தன்னுடைய சபைக்கு ஊழியக்குழுவினர்களை அனுப்பியதற்காக அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு ஒரு பாராட்டு மடலை உயர்திரு. லீ அவர்களிடம் வழங்கினார்கள். ஆவிக்குரிய யுத்த கிறிஸ்தவ ஊழிய சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டமானது CVV TV மற்றும் RTGA TV மூலமாக 50 நாடுகளுக்கு ஒளிபரப்பப்பட்டது. தொலைக்காட்சி வாயிலாக கூட்டங்களில் பங்குப்பெற்ற பிறகு அங்கோலா மற்றும் லண்டனில் இருந்து மக்கள் நன்றியை தெரிவித்தனர்.



**தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ**

# பிதாவாகிய தேவனுடைய அநாதி திட்டம்

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்"
(யோவான் 4:24)

நாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுது சத்தியத்தில் வாழ வாழ, ஆவியாயிருக்கிற தேவனுடைய இருதயத்தை நாம் அறிந்துணர்ந்து புரிந்துக்கொள்ள முடியும். தாவீது தனக்கு நேரான தேவனுடைய நல்ல சித்தத்தையும் அன்பையும் புரிந்துக்கொண்ட காரணத்தால் அவன் எல்லாக் காரியத்திலும் தேவனுக்கு நன்றி செலுத்தினான். விளைவாக, அவன் இஸ்ரவேல் மற்றும் யூதாவை ஐக்கிய இராஜ்ஜியமாக உருவாக்க முடிந்தது. மேலும் ஆபிரகாமுக்கு அருளிய உடன்படிக்கையை அடையப்பெறுகிற மகா ராஜாவானான்.

தாவீதைப் போல எப்போதும் நன்றியுள்ளவர்களின் மூன்று குணாதிசயங்களை நாம் ஆராய்வோம்.

### 1. அவர்கள் எப்போதும் தேவன் அவர்களுக்கு சிறந்தவற்றை மட்டுமே கொடுக்கிறார் என்று விசுவாசிப்பார்கள்.

அவர்கள் தேவனுடைய இருதயம் நன்மையும் அன்புமாக இருக்கிறதென்று விசுவாசிப்பார்கள். மேலும் தங்கள் வாழ்நாட்களில் தேவன் அவர்களுக்கு சிறந்தவற்றையே தருகிறார் என்று விசுவாசிப்பார்கள். தங்கள் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் அவர்களது அன்பை வெளிப்படுத்துவது போல, தேவனும்கூட தமது பிள்ளைகளுக்கு நேராக தமது அன்பையும் நன்மை நிறைந்த தமது இருதயத்தையும் வெளிப்படுத்துகிறார்.

சில சமயங்களில் பெலவீனமான விசுவாசமுடையவர்கள் தேவன் அவர்களுக்கு சிறந்ததை மட்டுமே தருகிறார் என்பதை விசுவாசிக்கமாட்டார்கள் என்பது உண்மைதான். விசேஷித்தவிதமாக அவர்கள் எதிர்பார்த்தபடி ஆசீர்வாதம் வரவில்லையெனில் அல்லது அவர்கள் சோதனைகளை சந்தித்தால் இப்படி உணருவார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய அன்பையும் நற்குணத்தையும் புரிந்துக்கொள்ள முயற்சித்தால், தேவன் அவர்களுக்கு சிறந்தவற்றையே கொடுக்கிறார் என்பதை விசுவாசித்து, அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவார்கள். அவர்கள் மாறாமல் சந்தோஷப்பட்டு சோதனைகள், பாடுகள், கஷ்டங்கள் அல்லது எவ்வகையான தவறான புரிந்துக்கொள்ளுதல் போன்ற எவ்வகை சூழ்நிலையிலும் நன்றி செலுத்துவார்கள்.

தாவீது இப்படி தான் இருந்தான். தாவீது அடுத்த ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு, அவன் சந்திக்கவேண்டிய நிஜம், அவன் துரோகி என்று தவறாக குற்றஞ்சாட்டப்பட்டான். அவன் வனாந்திரத்திலும் மற்ற தேசங்களிலும் ஓடிக் கொண்டே இருந்தான். அவனுடைய உயிருக்கு ஆபத்தான நிலையில், அவன் பைத்திய சேஷ்டை செய்தான். தன்னோடிருந்த மக்களுக்காக அவன் ஆகாரம் தேடுகையில் அவன் ஒரு அயோக்கிய மனிதனாலே பயங்கரமாக பரியாசம் பண்ணப்பட்டான். பெலிஸ்தரிலுள்ள கேயிலா ஊராருக்கு அவன் ஒரு காலம் சேவை செய்தான்; ஆனால் அவர்களோ சவுலுக்கு அவன் எங்கேயிருக்கிறான் என்று காட்டிக் கொடுத்தார்கள். தாவீது ஏமாற்றப்பட்டான்; ஒரு முறை அவன் பின்பற்றிய அவனுடைய சொந்த மனிதர்கள் கூட அவனை கல்லால் எறிந்துக் கொல்லப் பார்த்தார்கள்.

அவன் பல ஆண்டுகள் பாடுகளின் வழியாக கடந்துச் சென்று கொண்டிருந்தபொழுது அதன் மத்தியிலும் அவன் அழகான சங்கீதங்கள் பலவற்றை இயற்றினான். அவன் தன் சூழ்நிலை எவ்விதமாக இருந்தபோதிலும், இரவு பகலாக தேவனைத் துதித்தான். தேவன் எல்லாவற்றிற்கும் பிற்பாடு அவனுக்கு சிறந்தவற்றையே கொடுத்தார். அதாவது, தேவன் அவனுக்கு இஸ்ரவேல் தேசம் முழுவதையும் அவனுக்குக் கொடுத்தார். தேவன் அவனை தேவனாலும் ஜனங்களாலும் நேசிக்கப்பட்ட ராஜாவாகும்படியும், அண்டை தேசத்தாரின் கப்பங்களையும், பரிவர்த்தனைகளையும் பெறுகிற ராஜாவாகும்படி செய்தார்.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க விரும்பும் சிறந்த காரியம் நம் ஆத்தும செழிப்பு. இப்பாதையில் சில பாடுகள் இருக்கலாம். இருப்பினும், பாடுகள் என்பது நாம் உண்மையுள்ள இருதயத்தையும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் நம்மை பண்படுத்த வைக்கிற ஆசீர்வாதங்களுக்கு நேரான ஒரு படியே ஆகும். ஆகவே, நமக்குச் சிறந்தவற்றை மட்டுமே கொடுக்கும் தேவனில் நாம் விசுவாசம் வைக்க வேண்டும். அன்பும் நற்குணமுமாக இருக்கிற தேவன் நமக்கு ஏன் இப்பேர்பட்ட சூழ்நிலையை அனுமதித்திருக்கிறார் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், நாம் எல்லாவற்றிலும், நமக்குச் சிறந்தவற்றை மட்டுமே எப்போதும் கொடுக்கிற தேவனில் விசுவாசத்துடன் எல்லாவற்றிலும் நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து நிரம்பி வழிகிற நன்றிகளை நாம் செலுத்த வேண்டும்.

### 2. அவர்கள் தேவனுடைய நினைவுகள் தங்களது நினைவுகளைக் காட்டிலும் உயர்ந்தவை என்பதை விசுவாசிப்பார்கள்.

ஏசாயா 55:9 சொல்கிறது, "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." 1 கொரிந்தியர் 1:25ன் முற்பகுதி சொல்கிறது, "இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" என்று. இதன் அர்த்தம் தேவனுடைய ஞானம் என்பது மனித ஞானத்துடன் ஒப்பிடுவதற்கு அப்பால் உள்ளது.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதில் சரீர வரம்புள்ள ஒரு மனிதன் அந்த வேலையை செய்வதற்கு ஒரே ஒரு வழியை மட்டுமே பார்க்க முடியும். இருப்பினும், ஆவியாயிருக்கிற தேவன், அவனுடைய முறைமையை விட சிறந்ததான இரண்டு, மூன்று, நான்கு அல்லது அதற்கு மேல் பல வழிகளை பார்க்க முடியும். இந்த தேவனுடைய சித்தத்தை விசுவாசிக்கிறவர்கள் தேவனுடைய வழிகள் தங்களுடைய வழிகளை விட சிறந்தது என்ற கூற்றை ஒத்துக்கொள்வார்கள்; மேலும், தேவன் அவர்கள் எதிர்பாத்திராத பாதையில் அவர்களை நடத்தினாலும்கூட, அவர்கள் இன்னமும் நன்றி செலுத்துவார்கள்.

தாவீது இப்படிதான் இருந்தான். தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தை கட்டி அதை அவருக்குப் பிரதிஷ்டை செய்ய விரும்பினான். எனினும், தேவனுடைய சித்தம், அவனுடைய மரணத்திற்கு பிற்பாடு அவனுடைய குமாரனாகிய சாலொமோனால் அத்தேவாலயம் கட்டப்பட வேண்டும் என்பதே. அவன் தேவனுடைய தீர்மானத்தைக் குறித்து கோபித்துக்கொள்ளவில்லை. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகவும் அவன் போக முயற்சிக்கவில்லை. அவன் தேவனுடைய ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றாலும்கூட, அவன் கட்டுமான பணிக்கான பொருட்களை ஆயத்தப்படுத்தி, தேவாலயத்திற்கான பாடகர் குழுக் களையும் தன்னார்வ பணியாளர்களையும்கூட ஒழுங்குப்படுத்தி வைத்தான்.

அவன் நல்ல போர்திறன் அறிந்தவனாயிருந்தாலும்கூட, அவன் சின்ன சின்ன விளக்கங்களுக்காக தேவனிடத்தில் விசாரித்தான். அவன் அதை உணராமல், தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக சென்றபோது, அவன் அதை உணர்ந்தபோது தாமதமில்லாமல் தன்னைத்தான் தாழ்த்தி மனந்திரும்பினான். அவன் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடி இருக்கும்படியாக அவன் தன் வழிகளை விட்டு உடனடியாக திரும்பினான். அவன் ராஜாவாகி அத்தேசம் பலமான பின்பும்கூட, அவன் தாழ்மை மாறவில்லை. அவன் எப்போதும் தேவனுடைய சித்தத்தை தேடினான் (சங்கீதம் 25:5).

நீங்கள் ஆவியிலும் சரீரத்திலும் தாழ்ந்த நிலையிலிருக்கும்போது, நீங்கள் உங்களுடைய சித்தம் தேவனுடையதிலிருந்து வித்தியாசமானதாக இருக்கும் என்று ஒத்துக்கொள்வீர்கள். ஆனால் நீங்கள் அதிக அனுபமுள்ளவர்களாய் மாறும்போது, ஆசிரியர் அல்லது தலைவர் என்ற உயர்ந்த இடத்தில் உட்காரும்போது உங்களுக்கு என்ன நடக்கும்? தாவீது செய்ததுபோல எந்நேரமும் தேவ சித்தத்தைக் கேட்பதற்குப் பதிலாக, நீங்கள் உங்களுக்கு தேவ சித்தம் தெரியும் என்று நினைத்து உங்கள் சொந்தக் கருத்துகளை வலியுறுத்தமாட்டீர்களோ?

நீங்கள் உங்களுடைய நினைவுகளை காட்டிலும் தேவனுடைய நினைவுகள் உயர்ந்தவைகள் என்று விசுவாசித்து, தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். கூடவே, எந்நேரமும் ஜெபிப்பதன்மூலம் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு என்ன சொல்கிறார் என்பதற்கு நீங்கள் செவிகொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் தேவனுடைய சித்தம் உங்களுடைய வாழ்வில் மிக அழகாக நிறைவேற்றப்படும் என நம்புகிறேன்.

### 3. அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவார்கள்.

தேவன் அவர்களுக்கு சிறந்தவைகளை கொடுக்கிறார் என்றும், அவருடைய நினைவுகள் தங்களுடைய நினைவுகளை விட உயர்ந்தவை என்று விசுவாசிப்பவர்கள் அவர்கள் கற்றுக்கொண்ட தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவார்கள். தாவீதும் அப்படியே செய்தான். 1 இராஜாக்காள் 15:5 தாவீதின் நாட்களிலும் சாலொமோனின் நாட்களிலும் இஸ்ரவேல் தேசம் சிறந்த காலங்களை கொண்டிருந்ததின் காரணத்தைக் குறித்துப் பேசுகிறது.

அது, "தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானத்தைச் செய்து வந்தான்" என்று சொல்கிறது. தாவீது பத்சேபாளை எடுத்துக் கொண்டு உரியாவை சாக விட்டதை முற்றிலுமாக அறிக்கைச் செய்து மனந்திரும்பினான் என்பதை நாம் அறிந்துள்ளோம். உண்மைதான், தேவனுடைய தண்டனையின் வழியாக கடந்துச் சென்று அவன் அந்தப் பாவ சுபாவத்தை களைந்துப் போட்டான்.

இதன்மூலமாக, தேவன் அவனை இந்தப் பூமியில் ஒரு புகழ்பெற்ற தலைசிறந்த ராஜாவாக்கியது மட்டுமல்ல, பரலோகத்திலும் நித்தியமான கனத்தை அனுபவிக்கிற ஒரு உன்னத மனிதனாக அவனை நிலைப்படுத்தினார். நீங்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியும் போது, நீங்கள் உங்கள் ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்பட்டு, ஆசீர்வாதங்களையும் செழிப்பையும் பெறுவீர்கள். இது ஏசாயா 1:19ல், "நீங்கள் மனப்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்" என்று சொல்லப்பட்டது போல ஆகும். ஆகவே, மனப்பூர்வமான கீழ்ப்படிதல் மூலமாக உங்கள் ஜெபங்களுக்கு நீங்கள் பதிலைப் பெற்று எப்போதும் நன்றி நிறைந்த வாழ்வு வாழ்வீர்கள் என நம்புகிறேன்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, பிதாவாகிய தேவன் அன்பு நிறைந்தவர், நமக்கு சிறந்தவைகளை மட்டுமே தருபவர். தேவன் தாவீதின் மூலமாக தமது திட்டத்தை நிறைவேற்றினார், அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிற வளர்ச்சி கிரமத்தில், அவர் எப்போதும் தாவீதிற்கான தமது அன்பை வெளிப்படுத்தினார். தாவீது நன்றி நிறைந்த ஜீவியம் செய்தான், மரண இருளின் பள்ளத்தாக்கிலும்கூட அவனால் தேவனுக்கு துதிகளை ஏறெடுக்க முடிந்தது. நீங்கள் சங்கீதங்களில் காணப்படுகிறதான அதேவிதமான நன்றிகளை ஏறெடுக்கக்கூடியவர்களாகும்படி ஆண்டவருடைய நாமத்தினால் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**


"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]



# தாய்லாந்து, கென்யா மற்றும் DR காங்கோ போதகர்கள் மனந்திரும்பி, தேவனுடைய மகா பெரிய அன்பை உணர்ந்தார்கள்.



## “செய்தி வல்லமையாயிருந்தது!”



**போதகர் பீட்டர் ன்ஜாஉ,**
**கென்யா சுவிசேஷகர் சங்கத்தலைவர், நைரோபி**

போதகர்கள் கருத்தரங்கு பல போதகர்களால் பங்குப் பெறப்பட்டது. அது ஆச்சர்யமாக இருந்தது. உண்மையில், வல்லமையுள்ள இப்பிரசங்கங்களை உலகமெங்கிலும் இருக்கிற போதகர்கள் கேட்க வேண்டும். உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் பரிசுத்த ஆவியின் சத்தத்தை நன்றாக கேட்டு, அவரால் வழிநடத்தப்படுவதை மிகத் தெளிவாக வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துக்கொள்ளக்கூடிய அளவில் அதை விளக்கினார்கள். உண்மையான போதகர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் கற்று, தூய சுவிசேஷத்திற்காக நன்றியை உணருகி–றேன்.

தூய சுவிசேஷத்தை தேவனிடத்திலிருந்து பெறுவதற்கு அர்ப்பணிந்திருந்த அறிவர்.ஜோராக் லீ அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். அறிவர். லீ அவர்கள் ஆப்ரிக்காவில் ஐக்கிய படைமுயற்சி கூட்டத்தை நடத்துவார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

## “நான் பரிசுத்தமாகுதலை வாஞ்சிக்கிறவனானேன்!”



**உயர்திரு. அறிவர். சார்லஸ் கெலானி,**
**உலகளாவிய ஆப்ரிக்க பணி சங்கத்தின் பிரதிநிதி**

ஜீவனளிக்கிற செய்தி எங்கள் இருதயங்களை அசைத்து புதுப்பித்தன. எதிர்கால ஊழியத்திற்கு நாங்கள் நம்பிக்கை பெற்றோம்.

இந்த கருத்தரங்கில் பங்குப்பெற இயன்றதற்காக நான் மிகவும் நன்றியும் சந்தோஷமுமடைகிறேன். நான் மீண்டுமாய் நமக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் நம்முடன் பேசவிரும்புகிறார் என்பதை உணர்ந்தேன். நாம் அவருடைய வார்த்தைகளுக்கு கவனம் செலுத்தி, எல்லாக் காரியத்திலும் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இந்த விலையேறப்பெற்ற செய்தி பரிசுத்தமாகும்படி மிகப் பெரிதான வாஞ்சையை எனக்குத் தந்தது. இக்காலக்கட்டத்தில் மிகவும் அவசியமான விலையேறப்பெற்ற செய்தியை தந்ததற்காக நான் நன்றி செலுத்துகிறேன்.

## “செய்தியானது சத்தியம் நிறைந்ததாயும், தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றினதாயும் இருந்தது”



**போதகர் தீதே, ஆவிக்குரிய யுத்த கிறிஸ்தவ ஊழியம், காபோன்.**

நடத்தப்பட்ட படைமுயற்சி கூட்டம் ஆவிக்குரிய யுத்த கிறிஸ்தவ ஊழியத்தின் மூலமாக CVV TV மற்றும் RTGA TV மூலமாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டு, செயற்கைக்கோள் மூலமாக ஐம்பது தேசங்களை கவர்ந்தது. எங்களது பணித்தள ஊழியர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்கள் வந்து எங்களை ஆசீர்வதிப்பார் என எதிர்பார்க்கிறார்கள். நாங்கள் அவரைப் பார்க்க விரும்புகிறோம். காரணம் அவர் ஆண்டவர் அளித்த மாபெரும் ஆசீர்வாதங்களை பெறுவ–தற்கான வழியை காண்பிக்கிறார்.

இன்று எண்ணற்ற சொல்லி முடியா சபைகள் உள்ளன. ஆனால் அவைகளில் பல சத்தியத்தைக் குறித்து உண்மையான போதனைகளை அளிப்பதில்லை. அவர்கள் மக்களைப் பார்த்து, இதைச் செய் அல்லது அதைச் செய் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களது போதனைகள் அரிதாக கிறிஸ்து இயேசுவிலிருந்து வருகிறதாய் உள்ளது. இருப்பினும், மான்மின் மத்திய திருச்சபை தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

40,000 இருக்கைகள் அனைத்தும் திருச்சபையில் எடுக்கப்பட்டு விட்டன. படைமுயற்சி கூட்டம் கிருபை நிறைந்ததாயும் உணர்வுகளால் நிறைந்ததாயும் இருந்தது. மேலும், நான் ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர்ந்தேன். அவர்கள் கண்ணீரோடு மனந்திரும்பிய பின்னர், ஆச்சரிமான அற்புதங்கள் அதிசயமாய் ஆலயத்தை நிறைத்தது. தம்முடைய மகத்தான வல்லமையை காட்டிய தேவனுக்கும், நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஆண்டவருக்கும் என்னுடைய நன்றியை செலுத்–துகிறேன்.

## “உண்மையான போதகரின் இருதயத்தை அறிந்து உணர்ந்தபின் நான் இருதய வியாதியிலிருந்து சுகமானேன்”



**போதகர் வுராபோன் இங்வாதநாகுன், இந்தோசீனா வளைகுடா போதகர்கள் சங்க உபதலைவர்.**

அப்போஸ்தலர் 19:11–12ல் அப்போஸ்–தலனாகிய பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து வியாதியஸ்தர்கள் மேல் போட வியாதிகள் சொஸ்தமாயின. அசுத்த ஆவிகளும் அவர்களை விட்டு வெளியேறியது என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் மான்மின் மத்திய திருச்சபையில் நடைபெறுகிறது. 2008ல், நான் கொரியா சென்று எனது கைக்குட்டையில் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெற்று வந்தேன். கைக்குட்டை வல்லமையோடு, அண்டை ஊரில் உள்ள ஒரு மந்திரவாதியை இரட்சிப்புக்குள் வழிநடத்தினேன். அவனுடைய குடும்பமும் அவனுடைய ஊரில் உள்ள மக்களும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களது ஊரின் பெயரைக்கூட நாசரேத் என்று மாற்றிவிட்–டார்கள்.

நான் பரிசுத்த ஆவியின் மகத்தான வல்லமை கிரியைகளை அனுபவித்திருந்தாலும், நான் எனது ஊழியம் மற்றும் எனது உலக வேலையின் இடையில் இரு மனமுள்ளவனாக இருந்தேன். போதகராக நான் ஆத்துமாக்களுக்காக என்னை நான் அர்ப்பணிக்கவில்லை என்பதை அறிந்–துணர்ந்தேன். இந்தோசீனா வளைகுடா போதகர்கள் கருத்தரங்கில் ஒரு போதகனாக என்னுடைய சரியற்ற கிரியைகளை நான் அறிக்கைச் செய்து மனந்திரும்பினேன். அந்த மனந்திரும்புதலுக்குப் பின்னர், அறிவர். ஹீசன் லீ அவர்கள் என்னிடத்தில் வந்து வல்லமை நிறைந்த கைக்குட்டையை என்னுடைய நெஞ்சில் வைத்தார்கள்.

அந்தச் சமயத்தில், என் மேலே பரிசுத்த ஆவியின் வல்லமை வந்து என் இருதய வியாதியை சொஸ்தமாக்கியது. கஷ்டமான, சீரற்ற இதய துடிப்பு மற்றும் அசதி போன்ற எனக்கு இருந்த அறிகுறிகள் அனைத்தும் போய்விட்டன. அல்லேலூயா!

## இது மிகவும் ஆச்சரியமான அதிசயமாயிருந்தது!

**சகோதரர் பாக்பும், வயது 20, தாய்லாந்து**

“நான் பிறவியிலேயே திக்குவாயுடன் பிறந்தேன். என்னால் பிறருடன் கண் பார்த்து தொடர்பு கொள்ள முடியாது. அங்குமிங்கும் அதிகமாக சுற்றிப் பார்ப்பேன். ஆனால் ஜெபத்திற்கு பின், நான் பிறரை முகம் பார்த்து கண்களைப் பார்த்து தெளிவாக நான் சொல்ல வேண்டியவற்றை திக்காமல் பேச முடிகிறது.”



**சகோதரி வெய்சேதா, வயது 29, மியான்மர்**

“செவி திறன் கோளாரால் பத்து ஆண்டுகளாக பிறருடன் பேசுகையில் எனக்கு கஷ்டகாலமாக இருந்தது. அது எனக்குள் சமூக பயத்தையும் உண்டு பண்ணியது. ஜெபத்திற்குப் பின், எப்படியிருப்பினும், எனது செவிதிறன் ஆற்றல் முழுமையாக திரும்ப பெறப்பட்டது.”



**சகோதரி புலன்சேகா டோர்காஸ், வயது 17, DR காங்கோ**

“எனக்கு பிறவியிலிருந்து கண் பார்வை கோளாரு இருந்தது. படிப்பதில் எனக்குப் பல கஷ்டங்கள்இருந்தது. ஆனால் ஜெபத்திற்குப் பின் என் கண் பார்வை தேறியது. என்னால் இப்போது புத்தகங்களை நன்கு படிக்க முடிகிறது.”



**சகோதரி மேரி முசிகி, வயது 37, கென்யா**

“எனக்கு எனது கருமுட்டை கூம்பில் வேதனையாயிருந்தது; சைனஸ் தொற்றால் தலைவலியும் இருந்தது. எனது கண்கள் ஒன்றில் மோசமான கண் பார்வை கோளாரு இருந்தது. அதனால் என்னால் சிறிய எழுத்துக்களை வாசிக்க இயலவில்லை. ஆனால் ஜெபத்திற்குப் பின் எல்லா வேதனைகளும் போய்விட்டன. நான் சிறிய எழுத்துக்களை வாசிக்க ஆரம்பித்தேன்!”



## “என்னுடைய மகன் வுபின் பேச்சாற்றல் குறைபாட்டிலிருந்து சுகமடைந்தான்.”

சகோதரி போமி ச்சோய், வயது 35, 6வது மாகாணம், மான்மின் தலைமை சபை



என் மகன் வுபின்–க்கு நான்கு வயதாகிறது. 38வது மாதம் வரைக்கும் அவன் தெளிவாக பேசவில்லை. நான் அவனைப் பார்த்து, “வுபின், இது ஒரு கார். ஒரு கார்” என்று சொல் என்றால், அவன் சொல்வதை திரும்பச் சொல்லாமல், ‘ஆம்’ என்று மட்டும் சொல்வான். அவனுடைய வயதுடைய பிள்ளைகள் பல வார்த்தைகளை பயன்படுத்தினாலும், வுபினின் பேச்சு மூன்று வார்த்தைகளுக்கு மேல் போகாது. அதாவது 18 முதல் 20 மாதங்கள் வரையுள்ள குழந்தைகள் பேசும் மழலைப் பேச்சாக இருந்தது. அவன் தன் நண்பர்களோடு பேசுவதில் தடுமாறினான், அதனால் தன்னுடைய உணர்வுகளை பேச்சினால் அல்ல நண்பர்களை அசைத்தோ தள்ளியோ விட்டு வெளிப்படுத்துவான். எனவே நான் அவனை ஜூலை 10, 2017 அன்று, ஒரு குழந்தைகள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பரிசோதித்தேன். அதில் அவனுக்கு பேச்சாற்றல் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது.

மருத்துவர், அவனுக்கு மொழியாற்றல் சிகிச்சை, அறிவாற்றல் சிகிச்சை, மனரீதியான சிகிச்சை தேவைப்படுகிறது என கூறினார். ஏனென்றால், தசை சார்ந்த வளர்ச்சியிலும் தாமதம் ஏற்பட்டது. அந்த சிகிச்சைக்கான செலவு மாதத்திற்கு 1,000 டாலர்கள் (ஏறக்குறைய 60,000 ரூபாய்) ஆகும். அதற்கு அதிகம் செலவாகும் என்பதால் மருத்துவர் அவன் ஊனமானவன் என பதிவு செய்யும்படி அறிவுறுத்தினார். மேலும், வுபினின் பிரச்சனையை தற்பொழுதே சரியாக கவனிக்காவிட்டால், அது மனஇறுக்க நோயை கொண்டு வந்துவிடும் என கூறினார். நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். அவனுக்கு என்னச் செய்வது என்றே தெரியவில்லை. அந்த நேரத்தில்தான் 2017 மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்று சுகத்தைப் பெற ஆயத்தப்படுகிற வியாதியஸ்தர்களுக்கான முன்பதிவு நடந்து கொண்டிருந்தது. நான் அவனுடைய பெயரையும், பேச்சாற்றல் குறைபாடு என்ற அவனுடைய வியாதியையும் எழுதி பதிவு செய்தேன்.

நான் ஆகஸ்டு 7 அன்று, 2017 மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்றேன். தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தின் வேளையில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ கருத்தரங்கிற்கு பிறகு வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார். நானும் வுபினுக்காக ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். ஜெபம் முடிந்த உடனே, வுபின் என்னைப் பார்த்து, “அம்மா, என் அத்தை எங்கே? அவங்க கிளம்பி போயிட்டாங்களா?” என்று கேட்டான். அதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு சிறிய வாக்கியத்தை கூட அவன் பேசினதில்லை. நான் அப்படியே ஆச்சரியப்பட்டேன். தலைமை போதகர், ஆகஸ்டு 9 அக்கினி முகாம் துதி ஆராதனை வேளையின்போது மறுபடியும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பேன் என்று சொன்னபொழுது, வுபின் தன் கைகளை மடக்கி, மார்பில் வைத்துகொண்டு “ஜெபம்” என்று சொன்னான். மேலும் ஜெபத்தைப் பெற்றபொழுது, “ஆமென், ஆமென்” என்று சொன்னான்.

ஆகஸ்டு 10 அன்று, அவன் சுகமடைந்தான் என்ற உறுதியோடுகூட மருத்துவமனைக்குச் சென்றோம், அவன் பரிசோதனையின்கீழ் சென்றான். ஒரு மாதத்திற்கு முன்பு மிகவும் மோசமானதொரு நிலையில் இருந்த ஒரு சிறுபிள்ளை ஒரு மாதத்திற்குள்ளாக அதிக முன்னேற்றம் கண்டிருப்பது கூடாத காரியம் என்று மருத்துவர் ஆச்சரியமடைந்தார். அது முதற்கொண்டு, என் மகன் இப்பொழுது அதிகமாகவே பேசுகிறான், அவனுடைய பேச்சாற்றலிலும் துரிதமான முன்னேற்றம் காணப்படுகிறது. அல்லேலூயா!

அவன் பிறந்தபொழுது, இருதயத்தின் வலதுமேல் இதயவறையின் வாழ்வுகளில் பாதிப்பு இருந்ததால் அவனுடைய இருதயத்தில் நான்கு துளைகள் இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால் தலைமை போதகர் அவர்களின் ஜெபத்தினால் அவன் பரிபூரணமாய் சுகமடைந்தான். அந்த தேவ கிருபையை மறந்து போன நான் ஒரு ஆசீர்வாதமுள்ள வாழ்க்கையை வாழும்படி விரும்புகிற தேவ சித்தத்தையும் விட்டு விலகினேன். நான் மனந்திரும்பினேன், மேய்ப்பரின் மண்டலத்தில் எங்களை பாதுகாத்த கர்த்தருடைய அன்பை இருதயத்தில் பொறித்து வைத்துக்கொண்டேன். என் பாவங்களிலிருந்து என்னை மீட்டெடுத்த ஆண்டவருக்கும், என்னை ஒருபோதும் பின்தள்ளிவிடாமல், ஆசீர்வாதம் மற்றும் இரட்சிப்பின் பாதைக்குள் நடத்துகிற தேவனுக்கும், சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன். மிகுந்த அன்போடுகூட எங்களுக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் நான் நன்றிகளை செலுத்துகிறேன்.

## “என் மகன் இசு சிறுநீரக நீர்க்கோவையிலிருந்து சுகமடைந்தான்”

சகோதரி ஜின்ஜு லீ, வயது 30, 6வது மாகாணம், மான்மின் தலைமை சபை

நான் கர்ப்பந்தரித்ததால் உண்டான மகிழ்ச்சியினால் நிரப்பப்பட்ட எனக்கு சீக்கிரமே மருத்துவமனையிலிருந்து ஒரு அதிர்ச்சியான செய்தி வந்தது. அப்போது எனக்கு ஐந்தாவது மாதம். சிசுவின் சிறுநீரகத்தில் அடைப்பு இருந்தது; அது சிறுநீர் சம்பந்தமான பிரச்சனைக்கு வழிவகுத்தது. அதனால் அவனுடைய சிறுநீரகம் வீங்கி, சிறுநீர்ப்பையின் சுவர் தடித்துவிட்டது. அது முடிவாக, நீர் அவனது சிறுநீரகத்திற்குள் வந்தடையும் சிறுநீரக நீர்க்கோவை வியாதியாக மாறியது.

என் மகனை பெற்றெடுத்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு, சிறுநீரக பாதையில் அவனுக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. ஆறு மாதங்களுக்குப் பிறகு, மறுபடியும் பரிசோதனைகள் அவனுக்கு எடுக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சை செய்தும், சிறுநீரக நீர்க்கோவை நிலை அதிகமாகவே இருக்கிறது, நீர்ப்பை சுவரும் மிகவும் தடித்துவிட்டதால் குழந்தைக்கு அது சுருங்க கடினம் என மருத்துவர்கள் கூறினார்கள். மேலும், அவனுக்கு ஆறு மாதங்களுக்கு மருந்துகளை கொடுக்கவேண்டும் என்றும், அதைக் கொடுப்பதினால் சீக்கிரமாக சுகமாகிவிடும் என்று சொல்லிவிட முடியாது என்றும் மருத்துவர் கூறினார். மேலும் வாழ்நாள் முழுவதும் மருந்துகளை பயன்படுத்த அதிக வாய்ப்புள்ளது எனவும் மருத்துவர் கூறிவிட்டார்.

என் சிறுவயதிலிருந்து, நான் மான்மின் சபைக்கு வந்து, தூய்மை சுவிசேஷத்தை கேட்டிருக்கிறேன். எனினும் நான் சத்தியத்தின்படி வாழவில்லை, என் விசுவாசமும் வெதுவெதுப்பாகவே இருந்தது. என் வெதுவெதுப்பான விசுவாசமே என் மகனுடைய வியாதிக்கு காரணம் என்று நினைத்தேன். நான் செய்த பிரச்சனையால் என் மகன் அவதிப்படுகிறான்; நான் முற்றிலுமாக மனந்திரும்பினேன்.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தின் மூலமாக சிருஷ்டிகரான தேவனுடைய வல்லமை என் மகனை சுகமாக்கும் என்று நான் விசுவாசித்தேன். இந்த நம்பிக்கையோடு, நான் அவனுக்கு மருந்துகளை கொடுக்காமல், ஆறு மாதமும் காலை ஒருவேளை உபவாசத்தை மேற்கொண்டேன். என் மகனோடு நான் ஒவ்வொரு நாளும், தானியங்கி தொலைபேசியில் பதிவுசெய்யப்பட்டுள்ள தலைமை போதகரின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்று, அதில் வரும் மூன்று நிமிட பிரசங்கத்தையும், மான்மின் துதிகளையும் கேட்டேன். தலைமை போதகர் அவருடைய ஜெபமலை வீட்டிலிருந்து தலைமை சபைக்கு வந்தபோது, அவரிடம் என் மகனை அழைத்துச் சென்றேன்; தலைமை போதகர் அன்போடுகூட என் மகனுடைய தலைமேல் தன்னுடைய கைகளை வைத்து ஜெபித்தார்.

என் வாஞ்சை அதிகமாக பெருகியது, அதற்கேற்றபடி மே 15, 2017ல் சபையில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. நான் என் குழந்தையின் பரிபூரண சுகத்திற்காக தலைமை போதகரின் ஜெபத்தை விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் பெற்றுக்கொண்டேன். நான் அவரோடு கை குலுக்கும்போது, அவர் என் குழந்தையை பார்க்கும்படி மீண்டும் அழைத்து, அவன் தலைமேல் கைகளை வைத்தார்.



அடுத்த நாள், அது வழக்கமான பரிசோதனைக்குச் செல்லவேண்டிய நாளாக இருந்தது. என்னுடைய மருத்துவர் கட்டை விரலை மேலுயர்த்தி, “சிறுநீரக நீர்க்கோவை வியாதி இல்லை! 6 மிமீ ஆக இருந்த நீர்க்குழாய் 2 மிமீ ஆக உள்ளது. அது இயல்பான அளவிற்கு வந்துவிட்டது. நீர்ப்பையின் சுவரும் மெல்லியதாகிவிட்டது” என்று கூறினார். மேலும் அவனுடைய சிறுநீரக இயக்கமும் சரியாக உள்ளது என்றார். அல்லேலூயா!

அதைக் கேட்டு மருத்துவமனையை விட்டு நான் வெளியே வந்தபொழுது, தேவனுடைய அன்பு என் உள்ளத்தில் வெள்ளமாய் பாய்ந்தது. எனக்காகவும், என் மகனுக்காகவும் ஜெபித்த தலைமை போதகரின் அன்பிற்கும் நன்றியை உணர்ந்தேன். என் மகனுக்கு தற்போது 2 வயதாகிறது. இசு ஆரோக்கியமாக வளருகிறான்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com